# ‘நீட்’தேர்வு: ஒன்றிய அரசு–ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரத அறப்போராட்டம்!





ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகத்தின் சார்பாக தஞ்சை மத்திய தபால் நிலையம் அருகில் ”நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் – நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., அண்ணாதுரை எம்.எல்.ஏ., டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் – மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் திருமதி.அஞ்சுகம் பூபதி ஆகியோரும் அணி அமைப்பாளர்களும் கலந்துகொண்டார்கள்.



திருச்சி மத்திய, வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதன்மை செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு வழிகாட்டுதலின்படி திருச்சி ரயில்வே ஜங்சன் எதிரில் காதிகிராப்ட் அலுவலகம் முன்பு மத்திய, வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் நீட் தேர்வினை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும், மாநில ஆளுநரையும் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெற்றது. இந்த அறப்போராட்டத்தில் திருச்சி சிவா எம்.பி., மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன் மாநகரச் செயலாளர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன் ஆகியோர் துவக்கி வைத்தனர். அறப்போராட்டத்தில் எம்.எல்.ஏ.கள் ஸ்டாலின் குமார், கதிரவன் பழனியாண்டி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், மாநில மாணவரணி துணை செயலாளர் ஆனந்த், மருத்துவ அணி அமைப்பாளர் கண்ணன் மற்றும் மாத்தூர் கருப்பையா சேர்மன் துரைராஜ் கதிர்வேல் டோல்கேட் சுப்பிரமணி, சிங்காரம், செவந்திலிங்கம், கண்ணன், பொறியாளர் அணி கருணாநிதி மற்றும் மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



மாணவர்களை மட்டுமின்றி,பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற தமிழ்நாடு ஆளுநரையும் கண்டித்து, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி,மாணவரணி,மருத்துவரணி சார்பில், மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் புதிய பேருந்து நிலையத்தில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் திரளாகக் கலந்து கொண்டனர்.



மாணவர்களை மட்டுமின்றி,பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, திருவாரூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி சார்பில், மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமையில் திருவாரூர் இரயில் நிலையம் எதிரில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போர் போராட்டத்தை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவக்கிவைத்தார். இதில் இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா உள்ளிட்ட கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நீட் தேர்வை எதிர்த்து இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி சார்பில் நீட் தேர்வை எதிர்த்து நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கே.பொன்னுசாமி, கழக தீர்மான குழு துணைத் தலைவர் பார். இளங்கோவன், திராவிட மாடல் பாசறை பேச்சாளர் டான் அசோக், மாநில நிர்வாகிகள் சி.ஆனந்தகுமார், ப.ராணி அ.ரியா, மற்றும் மாவட்ட இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி,மருத்துவ அணி சார்பில் நீட்டை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து நாகை புதிய பேருந்து நிலையம் அவுரித்திடலில் உண்ணாவிரத அறப்போராட்டம் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமையில் நடைபெற்றது. உண்ணாவிரதப் போராட்டத்தில் கழக செய்தி தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன்இரவீந்திரன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன், துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.உதயக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி,கழக இளைஞர் அணிச் செயலாளரும்,தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரைக் கண்டித்து ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட இளைஞரணி, மாணவர் அணி,மருத்துவ அணி சார்பாக மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நகர பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு நடைபெற்றது. போராட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன்,நகரச் செயலாளர் நாட்டான் மாது,இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், சிவகுரு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் என்.பி.பெரியண்ணன்,சந்தர், மருத்துவ அணி அமைப்பாளர்கள் பெருமாள், டாக்டர்.டி.பழனிசாமி,மற்றும் முன்னாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர்,நகரக் கழகச் செயலாளர்கள்,வார்டு,கிளைகழகச்செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.



சேலத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழகச் செயலாளர்கள் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ எஸ்.ஆர்.சிவலிங்கம், டி.எம்.செல்வகணபதி முன்னிலையில் நீட் தேர்வை ரத்துச் செய்யக்கோரி ஆயிரக்கணக்கானோர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.